# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 01 வெள்ளிக்கிழமை 18.08.2023 கதிர் 53



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# குருந்தூர்மலையில் பொங்கல் விழா குழப்பம் ஏற்படுத்த முயன்ற பிக்கு!





குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் அமைதியாக பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது ‘குருந்தி விகாரை’ பௌத்த பிக்கு ஒருவர் நுழைந்து தமிழர்களின் பொங்கல் வழிபாட்டை சீர்குலைக்க முயன்றிருந்தார்.

இதனால், அங்கு பதற்றநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பொங்கல் நிகழ்வு சுமூகமாக இடம்பெற்று வந்த நிலையிலேயே பௌதத் பிக்கு நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்த முற்பட்டுள்ளார்.

பொங்கல் வழிபாட்டிற்கு சென்றிருந்த மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில், சம்பவ இடத்திலிருந்த பொலிஸார் இருதரப்பினரையும் சமரசப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, தொல்பொருள் திணைக்களத்தின் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், அவர்களால் வழங்கப்பட்ட நெறிமுறைகளின்படி குருந்தூர் மலையில் இன்று பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம், முல்லைத்தீவு குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையில் நூற்றுக்கணக்கான சிங்கள மக்களும் பௌத்த பிக்குகளும் இணைந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

குருந்தூர் மலையில் இன்று பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட ஏற்பாடாகியிருந்த நிலையில், தென்பகுதியிலிருந்து சுமார் ஐந்து பேருந்துகளில் அவர்கள் அங்கு வந்திருந்தனர்.

2➤

## தனியார் காணியை அபகரிக்க முயற்சி பிக்கு உட்பட 5 பேர் பொலிஸாரால் கைது!

மாத்தளை உக்குவளை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் காணியினுள்ளும் அதில் உள்ள பங்களாவுக்குள்ளும் பலவந்தமாக நுழைந்து, அவற்றைக் கைப்பற்றிக்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் குறித்த பிரதேச விகாராதிபதியான பிக்கு உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பள்ளேகொட்டுவ ஸ்ரீ விஜயசுந் தரராம விகாராதிபதி

2➤

## யாழ் பல்கலை துணைவேந்தராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை,

2➤



## இனவாத அரசியல்வாதிகளை தூண்டிவிடும் ரணில்! நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம் குற்றச்சாட்டு



மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு ஒரு நிபுனர் குழுவை ஜனாதிபதி நியமிப்பதென்பது இந்த நாட்டு மக்களை மாத்திரமல்லாமல் சர்வதேசத்தையும், குறிப்பாக இந்தியாவையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம், என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) இன்று மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்தார்.

இலங்கையில் மாத்திரமல்ல உலகத் தமிழர்கள் மத்தியிலும் இன்று பேசுபொருளாக மாறியிருக்கின்ற விடயம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாகக் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச் சட்டம்.

இந்த 13வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 36 ஆண்டுகள் கடந்திருந்தாலும் இலங்கை அரசியலமைப்பிலிருக்கும் இந்தச் சட்டம் இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது.

அந்த வகையில், இந்த நாட்டில் மாறி, மாறி அரசாங்கத்தைக்

2➤

## 100 மெகாவாட் மின்சாரத்தை வாங்குவதற்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி!

100 மெகாவாட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

100 மெகாவாட் மின்சாரத்தை 6 மாத காலத்திற்கு கொள்வனவு செய்ய இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இன்று அனுமதி வழங்கியுள்ளது.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 43 ஆவது பிரிவின் கீழ் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 3 முக்கிய நிபந்தனைகளின் கீழ் 2023 ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முதல் 6 மாத

## ஐக்கிய தேசியக் கட்சியுடன் பலர் இணைந்துகொள்வார்கள்

-அமைச்சர் மனுஷ நாணயக்கார

ஜனாதிபதித் தேர்தலின்போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பலர் இணைந்துகொள்வார்கள் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், எதிர்க்கட்சித் தலைவருக்கு கோட்டாவின் வீழ்ச்சிக்கு காரணமான தரப்பினருடன்தான் எதிர்க்காலத்தில் பயணிக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியில் எதிர்காலத்தில் பலர் இணைந்துக் கொள்ளவுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலின்போது பலர் இணைந்துக் கொள்வார்கள்.

ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஜே.வி.பியினருடனோ நாலக

2➤

## சோளத்திற்கான இறக்குமதி வரி குறைப்பு

ஒரு கிலோ சோளத்திற்கு விதிக்கப்பட்ட 75 ரூபா இறக்கு மதி வரி நேற்று இரவு முதல் 25 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் சோளத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் கால்நடைகளுக்கான உணவுவகைகளின் விலைகளைக் குறைப்பதே இதன்நோக்கமாகும், என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (04)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலைச் செய்தி இதழ்

# மக்கள் பக்கம் நிற்கும் ரணிலுக்கு எப்போதும் ஆதரவு வழங்குவோம்

## - அமைச்சர் பந்துல கருத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் பக்கமே நின்று தீர்மானங்களை எடுத்து வருகின்றார். அவரின் ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு நன்மை பயக்கும் தீர்மானங்களுக்கு நாம் எப்போதும் ஆதரவு வழங்குவோம், என்று நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிப்பவர்கள் முதலில் கண்ணாடிகளில் தங்கள் முகங்களைப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தெளிவடைவார்கள்.

அதல பாதாளத்தில் வீழ்ந்த எமது நாட்டை ரணில் அரசு மீட்டு வருகின்றது. அதைக் குழப்பியடிக்கும் விதத்தில் எதிரணிகள் செயற்பட்டு வருகின்றன. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் பக்கம் நின்று தீர்மானங்களை எடுத்து வருவதால் அவர் வெற்றியடைந்தே தீருவார், என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தனியார் காணியை......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி )

மாவதகம தம்மரதன தேரர் உட்பட 5 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணி மற்றும் பங்களாக்களின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பங்களாவை பௌத்த சாசன திட்டத்திற்கு வழங்குமாறு கைதுசெய்யப்பட்டுள்ள பிக்கு, அண்மையில் காணி மறுசீரமைப்பு அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார். எனினும், 419 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட இந்த காணி, காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு சொந்தமானது அல்ல என அதிகார சபை கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(04)

## ஐக்கிய தேசியக்.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி )

கொடஹேவாவுடனோ ஜீ.எல். பீரிஸ்டனோ கூட்டணி அமைத்துக் கொள்ள முடியும்.

கோட்டாபய ராஜபக்சவை வீழ்த்திய தரப்பினருடன், இணைந்துதான் எதிர்க்காலத்தில் சஜித் பிரேமதாஸவினால் பயணிக்க நேரிடும்.

மக்கள் வீழ்ந்து இருக்கும்போது, தன்னால் அதற்கான சவாலை பொறுப்பேற்ற முடியாது என்பதை சஜித் பிரேமதாஸ முழுநாட்டுக்கும் நிரூபித்துவிட்டார்.

அவர் நாட்டு மக்களுக்கானவர் அல்ல. அந்த சவாலை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த ஒருவருட காலமாக நாட்டை முன்னேற்றியுள்ளார்.

அடுத்த வருடத்தில் இதனைவிட முன்னேற்றகரமான பாதையில் நாம் பயணிப்போம். நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரக்கூட அவர்கள் அஞ்சுகிறார்கள்.

நாம் எதற்கும் தயாராகவே உள்ளோம். நாம் கட்சி அரசியலுக்கு அப்பாற் சென்று, நாட்டை முன்னேற்றுவது தொடர்பாகவே தற்போது செயற்பட்டு வருகிறோம், என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ் பல்கலை ......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி )

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அப்பதவிக்கு நியமித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## 100 மெகாவாட் மின்சாரத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

காலத்திற்கு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், குறித்த மின்சார கொள்முதல் சிறப்புத் தகுதியின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும் மற்றும் மின்சார கொள்முதல் ஒப்பந்த காலத்தின் முடிவில் கொள்முதல் பற்றிய சுயாதீன தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று முதல் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கொத்மலை பொல்பிட்டிய 220 கே.வி. பாதை 2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயல்படுத்தப்பட வேண்டும் என்று இரண்டாவது நிபந்தனையும், கொள்வனவு செய்யவுள்ள மின்சாரத்தை குறைந்தபட்ச விலையின் அடிப்படையில் கொள்வனவு வேண்டும் என்று மூன்றாவது நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. (04)

## குருந்தூர்மலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

இன்றைய பொங்கல் நிகழ்வுகளில் குழப்பங்கள் ஏற்படலாம் என்பதன் அடிப்படையில், 3 பேருந்துகள், 2 இராணுவ ட்ரக் வாகனங்களில் நூற்றுக்கணக்கான காவல்துறையினரும் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பு கடமைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

புராதன சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அப்பிரதேச மக்கள் தங்களது மத ரீதியான பூசை வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனவும், ஒருவரது மத வழிபாடுகளுக்கு மற்றைய தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதற்காக ஒருவரது மதவழிபாடுகளை தடுக்க தடை கட்டளை வழங்க முடியாது எனவும், பொங்கல் நிகழ்வை நிறுத்துவதற்கான பொலிஸாரின் தடையுத்தரவுக் கோரிக்கையை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க, 04)

## இனவாத அரசியல்வாதிகளை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

கைப்பற்றி ஆண்டு கொண்டிருக்கும் கட்சிகளும், தலைவர்களும் இலங்கையின் அரசியலமைப்பையே மீறிக் கொண்டிருக்கின்ற சட்டவிரோதமான நடவடிக்கையைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்ரமசிங்க 13வது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவந்து, நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கூறுகின்றார்.

உண்மையிலேயே அன்று 1987 இல் 6 இல் 5 பெரும்பான்மையைக் கொண்ட நாடாளுமன்றத்திலே தான் இந்த 13வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அது மாத்திரமல்ல - அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் உட்பட அக்கட்சியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருக்காத நிலையில், ஒட்டுமொத்த சிங்களப் பிரதிநிதிகளை மாத்திரம் வைத்தே 6 இல் 5 பெரும்பான்மையாக நிறைவேற்றப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தை மீண்டும் ஒரு தடவை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுபோக வேண்டிய தேவை இருக்காது.

ஆனால், 13வது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து சிங்கள மக்கள் மத்தியில் இன்று செல்லாக் காசுகளாக இருக்கும் அரசியல்வாதிகளைத் தட்டியெழுப்பி, இனங்களுக்கடையிலே மோதலை, முறுகலை ஏற்படுத்தி மீண்டும் ஓர் இனக்கலவரத்தை உருவாக்கும் சூழ்நிலைக்கு ஜனாதிபதி கொண்டு வந்திருக்கின்றார் என்றே எண்ணத் தோணுகின்றது.

அதுமாத்திரமல்லாமல், தற்போது 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்று சிங்கள இனவாதிகள் கூறுகின்றார்கள். இந்த 13வது திருத்தச் சட்டத்தையும் அதனூடாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமையையும் இல்லாதொழிப்பதற்கான சட்டம் அவர்களால் நாடாளுமன்றத்திலே கொண்டுவரப்படட்டும். அதற்குப் பின்னர் இந்த நாடு எந்த நிலைமைக்குச் செல்கின்றது என்பதை அவர்களே உணர்ந்து கொள்வார்கள்.

13வது திருத்தச்சட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபைத் தேர்தலை நடத்தாது ஜனாதிபதி நீண்ட காலமாக இழுத்தடிப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஏனெனில், ஒரு ஜனநாயக நாட்டிலே மக்கள் தங்களை ஆளக்கூடிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். ஆனால், இன்று மாகாணசபைத் தேர்தலை நடத்தாது மாகாணசபைகளுக்கு நிபுணர்குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார்.

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் உட்பட சில கட்சிகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

மாகாணசபைகளுக்கு நிபுணர்குழுவை அமைப்பதென்பது மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கான தந்தரமே ஒழிய இதன் மூலம் வேறு எதையுமே சாதிக்க முடியாது.

மாகாணத்திற்கும், மத்திக்கும் இடையிலான அதிகாரங்களை எவ்வாறு பகிர்வது என்பது தெடர்பாக ஆராய்வதற்காகவே இந்த மாகாண நிபுணர் குழு அமைப்பதாகக் கூறுகின்றார்கள்.

ஆனால், அதிகாரங்கள் எவ்வாறு பகிரப்பட வேண்டும் என்பதும், பொலிஸ் அதிகாரம் தொடர்பாகவும் 13வது திருத்தச் சட்டத்திலே விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மாகாணப் பொலிஸ் ஆணைக்குழுவில் மாகாண முதலமைச்சரின் பிரதிநிதி, மத்திய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதிநிதி, அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி என மூவர் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இங்கு சிலருக்கு வரலாறு தெரியாது.

1988 ஆம் ஆண்டு இறுதியிலே வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையிலே பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசாவை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸ நியமித்திருந்தார்.

அவரின் கீழே 3000 மாகாண பொலிசாரை நியமிப்பதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு 13வது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டு மீளப்பெறப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

அந்த வகையில், மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு ஒரு நிபுணர் குழுவை ஜனாதிபதி நியமிப்பதென்பது இந்த நாட்டு மக்களை மாத்திரமல்லாமல் சர்வதேசத்தையும், குறிப்பாக இந்தியாவையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இன்றும் குருந்தூர் மலையிலே களேபரம் நடக்கின்றது. தொல்பொருள் திணைக்களம் அங்கிருக்கின்ற இந்துக் கோவிலில் பூசை செய்ய விடாமல் தடுக்கின்றது.

ஆனால், அங்கிருக்கின்ற இந்துக்கள் இன்று அந்தக் கோவிலில் பொங்கல் வழிபாடு செய்யகின்றார்கள். அதனைத் தடுப்பதற்காக பௌத்தர்கள் செல்கிறார்கள்.

உதய கம்மன்பில போன்ற இனவாத அரசியல்வாதிகளும் செல்கின்றார்கள். இவர்களையெல்லாம் ஜனாதிபதி தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதாகவே நாங்கள் எண்ணுகின்றோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்து கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது மாத்திரமல்லாமல், புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கண்டு இந்த நாடு ஸ்திரமான நாடாக இருப்பதற்குமான வழியினை அவர் ஏற்படுத்த வேண்டும், எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம் தெரிவித்தார். (க)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# கச்சதீவு பற்றிய வரலாறு தெரியாமல் உளறுகிறார்கள்!
## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மண்டபத்தில் உரை



ராமேஸ்வரம் மண்டபத்தில் இன்று நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார்.

அங்கு அவர் பேசியபோது, இலங்கைக்கு கச்சதீவு தாரைவார்க்கப்பட்டதாக வரலாறு தெரியாமல் உளறிக் கொண்டு இருக்கிறார்கள். கச்சதீவுக்காக நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வெளிநடப்புச் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க.தான். தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்யும் விஷயத்தை எப்போதும் அ.தி.மு.க. தெளிவாகச் செய்கிறது, என்று தெரிவித்தார்.

கச்சதீவை தாரைவார்க்கக்கூடாது என டெல்லி சென்று அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி வலியுறுத் தினார். கச்சதீவு இலங்கை அரசுக்கு உகந்ததாக எக்காலத்திலும் இருந்தது இல்லை, என கருணாநிதி கடிதம் எழு தினார். இந்தியாவின் ஒரு பகுதியான கச்ச தீவை மாநில அரசான தி.மு.க. தாரைவார்த்ததாக அடிப்படை அறிவு இன்றி பேசுகின்றனர், என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொலம்பியாவில் நில நடுக்கம் வீதியில் தஞ்சமடைந்த மக்கள்!



தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் கொலம்பியாவின் தலைநகர் போகோடாவின் தென்கிழக்கே 100 கிலோமீற்றர் தொலைவினை மையமாகக் கொண்டிருந்தது.

6.3 ரிக்டர் அளவில் பதிவான இந்த நிலநடுக்கத்தால் அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள் அதிர்வுக்குள்ளாக்கின எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தில் கட்டிடங்கள் குலுங்கியதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

முதல் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் 5.7 ரிக்டர் அளவில் மற்றுமொரு நில அதிர்வும் ஏற்பட்டுள்ளது.

உயரமான கட்டிடங்களில் வசித்த மக்கள் பீதியில் வீடுகளை விட்டு வெளியேறி, வீதிகளில் தஞ்சம் அடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

கொலம்பியாவில் உள்ள மெட்ல்லின் மற்றும் காலி உள்ளிட்ட நகரங்களிலும் இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள், சேதங்கள் போன்றவற்றின் விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. (க)

# உக்ரைனின் ஆளில்லா விமானம் மோதல் மொஸ்கோவில் சேதமடைந்த கட்டிடம்!

உக்ரைனின் ஆளில்லா விமானம் சுடப்பட்டு, அதன் பாகங்கள் மோதியதில் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள கட்டிடம் ஒன்று சேதமடைந்துள்ளது.

தாக்குதலுக்காக வந்த இந்த ஆளில்லா விமானம் ரஷ்யப் படைகளினால் சுடப்பட்டபோது, சேதமடைந்த அதன் ஒரு பகுதி, நகர மையத்தில் உள்ள கட்டிடம் ஒன்றில் சரிந்து வீழ்ந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, டென்மார்க் மற்றும் நெதர்லாந்து நாடுகளைச் சேர்ந்த எப்-16 போர் விமான விமானிகளுக்கு பயிற்சியளிக்க அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைனுக்கு ஆதரவாக இந்த விமானிகளுக்கு பயிற்சி அளிக்க 11 நாடுகளின் கூட்டணி திட்டமிட்டிருந்தது.

ரஷ்யாவின் படையெடுப்பின்போது உக்ரைனை ஆதரிக்கும் நட்பு நாடுகளின் தலைமையாக அமெரிக்கா செயல்படுகிறது. எனவே, விமானிகளுக்கு பயிற்சி



அளிக்க அமெரிக்காவின் ஒப்புதல் தேவைப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# மலேசியாவில் நெடுஞ்சாலையில் இறங்கிய விமானம் - 10 பேர் பலி



மலேசியாவின் லங்காவி தீவில் இருந்து சுபாங் விமான நிலையத்துக்கு தனியாருக்கு சொந்தமான சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டது. இதில் இரு விமானிகள் உள்பட 8 பேர் பயணம் செய்தனர். ஆனால், புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானம் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதனால், அந்த விமானத்தை உடனடியாக தரையிறக்க விமானி முயன்றார்.

அதன்படி சிலாங்கூர் அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் விமானத்தைத் தரையிறக்க முயற்சி செய்தார்.

நெடுஞ்சாலையில் இறங்கியபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார் மீது விமானம் மோதியது. இதில் விமானம் நொறுங்கி விழுந்தது. மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் சிலருக்கு படுகாயம் ஏற்பட்டது.

இதனையடுத்து தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை அணைப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஆயினும், விமானத்தில் பயணித்த 8 பேர் உள்பட 10 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையே, மோட்டார் சைக்கிள் மற்றும் காரில் விமானம் மோதுவது போன்ற காட்சிகள் சமூகவலைத் தளங்களில் வைரலாக பரவி வருகின்றன. இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நைஜீரியாவில் 3 மாதங்களுக்கு பிறகு அமைச்சரவைப் பட்டியல் அறிவிப்பு



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் அதிபர் போலா டினுபு தலைமையிலான ஆட்சி நடந்துவருகிறது. இவர் பதவியேற்று 3 மாதங்கள் ஆகியும் அங்கு அமைச்சரவை அறிவிக்கப்படாமல் இருந்துவந்தது.

இந்தநிலையில் தற்போது அமைச்சரவைப் பட்டியலை அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி நிதியமைச்சராக வேல் எடுன், வெளியுறவுத்துறையில் யூசுப் துகர், பாதுகாப்புத்துறைக்கு மொகமட் பதரு அபுபக்கர் மற்றும் போக்குவரத்து துறையமைச்சராக அடேக்போயேகா ஓயெடோலோ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.


இவர்களது பதவிப்பிரமாணம் விரைவில் நடைபெறும் என அதிபரின் செய்தித்தொடர்பாளர் அஜுரி என்கெலேலே தெரிவித்துள்ளார்.

அதிபர்போலா டினுபுவின் ஹதேசிய ஒற்றுமை மற்றும்



திறன் கொண்ட அரசாங்கம்’ என்ற வாக்குறுதியின்படி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்.களுக்கும் அங்கு அமைச்சுப் பதவி கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லிபியாவில் அவசர நிலை பிரகடனம்



வடக்கு ஆபிரிக்க நாடான லிபியாவில் சர்வாதிகாரியாக செயல்பட்ட அதிபர் முகமது கடாபி 2011ஆம்ஆண்டு பொதுமக்கள் கிளர்சசியின் போது படுகொலை செய்யப்பட்டார். அதன்பிறகு அங்கு பல்வேறு கிளர்ச்சிக் குழுக்கள் தோன்றின.

இந்த நிலையில், அங்குள்ள முக்கிய கிளர்ச்சிக் குழுவான 444 படைப்பிரிவின் தளபதி மஹ்மூத் ஹம்சா மிட்டிகாவில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு சென்றபோது, அவரை சிறப்பு படைப்பிரிவினர் தடுத்து நிறுத்தி கைதுசெய்ததால் இரு பிரிவினருக்கும் இடையே மோதல் ஆரம்பித்து, நடைபெற்று வருகிறது.

கடந்த சில தினங்களாக நடைபெற்றுவரும் இந்த வன்முறையால் அங்கு அப்பாவிப் பொதுமக்கள் உள்பட 55 பேர் உயிரிழந்தனர். 126 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. இதன்காரணமாக அங்கு வன்முறை அதிகம் உள்ள பகுதிகளில் அவசர நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு வருடாந்தம் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் அழைத்து வரும் வேலைத்திட்டத்துக்கு ஜனாதிபதி பணிப்பு!



இலங்கைக்கு வருடாந்தம் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதும், சிறந்த சுற்றுலா வசதிகளைக்கொண்ட இடமாகவும் இலங்கையை மாற்றுவதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக தற்போது முன்னெடுக்கும் திட்டங்கள் மற்றும் தனியார் துறையின் பங்களிப்பு குறித்து அதிகாரிகளிடம் ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, நடைமுறைச் செயற்பாடுகள் மற்றும் புதிய நிலைவரங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட வசதிகளை மேம்படுத்தும் வகையில், தற்போது பயன்படுத்தப்படாத பாரம்பரிய தோற்றம் கொண்ட கட்டிடங்கள் மற்றும் பங்களாக்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை தயாரிக்குமாறும், தற்போது வரையில் சுற்றுலாப் பயணிகளின் கவனத்திற்கு உட்படாத பகுதிகளைக் கண்டறியுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

புதிய முதலீடுகளுக்கு உகந்த சூழலை நாட்டிற்குள் உருவாக்குவதற்கான முதலீட்டு உட்கட்டமைப்பு கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்பட்டு, கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சபையொன்றை ஸ்தாபிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் முதலீட்டு வலயங்கள், சுற்றுலா வலயங்கள், தொழில்நுட்ப வலயங்கள் என்பவற்றை அதன் கீழ் நிறுவத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (க)

# தரம் மூன்றில் கல்வி கற்கும் 85 வீத மாணவர்களுக்கு இலங்கையில் எழுத்தறிவு குறைவு – யுனிசெப்




இலங்கையில் தரம் மூன்றில் கல்வி கற்கும் 85 வீத மாணவர்களுக்கு எழுத்தறிவு குறைவாக உள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ( யுனிசெப் ) சுட்டிக்காட்டியுள்ளது.

மூன்றாம் தரத்தில் கல்வி கற்கும் 85 வீதமான மாணவர்களின் எழுத்தறிவு மற்றும் எண் கணித அறிவு குறைந்தபட்ச நிலையிலேனும் எட்டவில்லை என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலைமை குழந்தைகளின் இடைநிலைக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால வாழ்வில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 வருடங்களாக பாடசாலைகள் மூடப்பட்டதனால், அல்லது இடைநிறுத்தப் பட்டமையினால் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த 1.6 மில்லியன் மாணவர்கள் கல்வியை இழந்துள்ளதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சும் யுனிசெப் நிறுவனமும் இணைந்து மாணவர்களுக்கு மூன்று வருடங்கள் தவறவிட்ட கல்விக் காலத்தை மீள வழங்குவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை 16 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பித்தபோது, இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டது. (க)




# முன்னேற்றத்தில் உழைக்கும் மக்களும் பங்குதாரராக வேண்டியது அவசியம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கருத்து



ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்துடன் நெருக்கமாக இருப்பதால் விசேட வரப்பிரசாதங்கள் மற்றும் சலுகைகள் பெறக்கூடிய சகாப்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், இந்நாட்டில் உள்ள வர்த்தகர்களுக்கு சம நிலையில் போட்டித் தன்மை வாய்ந்த வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும், அது போலவே இந்த முன்னேற்றத்தில் உழைக்கும் மக்களும் பங்குதாரர்கள் ஆக வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஊழல், மோசடி, திருட்டு என்பன ஒழிக்கப்பட்டு, இந்நாட்டை அழித்த ஊழல் கும்பல்களால் கொள்ளையடிக்கப்பட்ட நிதியை நாட்டுக்குத் திருப்பி எடுத்து, அந்தத் திருடர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும், மக்களுக்காக இழந்த வளங்களை மீளப் பெறுவதற்கு சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் தலைமையிலான குழுவின் நேற்றைய இலங்கை வர்த்தகர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பணக்காரர்கள் மட்டுமல்ல, சாமானியர்களும் பங்குச் சந்தையில் ஒரு சிறிய பங்கையேனும் வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தை தான் கொண்டுள்ளதாகவும், இதன் ஊடாக இளைஞர் சமூகம் பொருளாதாரப் பயணத்தில் அங்கம் வகிப்பது எமது நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், இலாபத்தில் ஒரு பகுதி உழைக்கும் மக்களுக்குச் செல்ல வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு பணியிடத்தில் தொழில் அமைதி அவசியம் என்றும், அதை உருவாக்க அரசாங்கம், உரிமையாளர்கள், உழைக்கும் மக்கள் என 3 தரப்புகளும் ஒரே தடத்தில் செல்ல வேண்டும் என்றும், இது ஒரு தரப்புக்குக் கிடைத்த வெற்றியாகவும், ஒரு தரப்புக்குத் தோல்வியாகவும் இருக்கக் கூடாது என்றும், அனைத்துத் தரப்புகளும் வெற்றிபெற வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி காலாவதியான கட்டமைப்பிற்குள் செயல்படவில்லை என்றும், மாறாக எதிர்கால தொலைநோக்குப் பார்வை கொண்ட, தொழிலாளர்களுக்கு ஆதரவான மக்கள் சார் பயணம் இது என்றும், இதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும், வர்த்தக உரிமையாளர்களும் தொழிலாளர் சமூகமும் ஒருவரையொருவர் சந்திக்கும் கலந்துரையாடல் அரங்கமாக அடுத்த அமர்வை நடத்தவுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

# அன்னமலை வைத்தியசாலைக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விஜயம்

(நூருல் ஹுதா உமர்)

ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்தும் பிஎஸ்எஸ்பி திட்டத்திற்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவு செய்யப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அன்னமலை வைத்தியசாலைக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் மெலிண்டன் கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம். சி. எம். மாஹிர் ஆகியோர் விஜய மொன்றை மேற்கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டனர்.

கட்டுமானப் பணிகளின் துரிதத் தன்மை மற்றும் ஏனைய சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது திருப்தியை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# வேலணை பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா!



வேலணை பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வு இன்றையதினம் பிரதேச செயலரும் பிரதேசத்தின் பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான கைலாயபிள்ளை சிவகரன் தலைமையில் வேலணை மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடை பெற்றது.

யாழ் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாத சுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இந்த நிகழ்வில், மதத்தலைவர்கள் ஆசியுரை வழங்கியிருந்தனர்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகம் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய இந்தப் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வில், வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த 13 கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு நினைவுப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஷ் மற்றும் வேலணை மத்திய கல்லூரி அதிபர் ஹஸ்ரன் றோய் ஆகியோருடன் சிறப்பு விருந்தினராக அன்னை கடலுணவு வாணிப உரிமையாளர் செபஸ்ரியாம்பிள்ளை அமலதாஸ்ஆகியோரும் இணைந்துகொண்டிருந்தனர். (01)

# கொழும்பு புறநகர்ப் பகுதி மக்களுக்கு முகக்கவசம் அணியுமாறு அறிவித்தல்!



கொழும்பின் புறநகரில் அமைந்துள்ள ஹோமாகம பிரதேசத்தை அண்மித்த குடியிருப்பாளர்கள் முகக்கவசம் அணியுமாறு விசேட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

ஹோமாகம பகுதியிலுள்ள தொழிற் சாலையொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் இரசாயன களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீவிபத்தினால் ஏற்படக்கூடிய சுவாசக் கோளாறுகளை குறைப்பதற்காகவே இந்த விசேட கோரிக்கையை அனர்த்த முகாமைத்துவ பிரிவு முன்வைத்துள்ளது. ஹோமாக தொழிற்சாலையில் உள்ள இரசாயன களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்த 7 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. நேற்று இரவு 8.30 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கோட்டை நகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் ஹொரணை நகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# பல சேவைகள் அத்தியாவசியமாகின வெளியானது விசேட வர்த்தமானி



இலங்கையில், பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக மாற்றும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடப்பட்டுள்ளது.

இதன்படி, மின்சார விநியோகம், பெட்ரோலியத் துறை, மருத்துவத் துறை உள்ளிட்ட துறைகளின் கீழான சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னர் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தல் மேலும் நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மின்சார விநி யோகம் தொடர்பான அனைத்து சேவை களும் அத்தியாவசிய சேவைகளாக மாற்றப்பட்டுள்ளதுடன் பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருளின் விநியோகமும் அவற்றில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் நோயாளிகளை பராமரித்தல், உணவளித்தல் மற்றும் இணைச் சிகிச்சை ஆகியவற்றிற்காக அனைத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மகோற்சவ கொடியேற்றம் இன்று

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

12 நாள் திருவிழாக்களைக் கொண்ட வருடாந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.





# எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தோருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கலுக்கான வாய்மொழிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்!

எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தோருக்கான சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய் மொழி பரீட்சை யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் குறித்த பரீட்சை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள், தமது பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று, அதனைப் பூர்த்தி செய்து, கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளரிடம் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு விண்ணப்பிப்பவர்கள் எழுதும் மற்றும் வாசிக்கும் திறன் குறைந்தவர் என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் சமர்ப்பித்து, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் முற்பதிவுகளை மேற்கொண்டு, குறித்த திகதிகளில் வாய் மொழிப் பரீட்சையில் தோற்ற முடியும் என மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார். (க)

# கல்முனை தனியார் வைத்தியசாலைகளில் சுகாதார பணிமனையால் திடீர் சோதனை

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் இணைந்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் தமது பணிமனைக் குட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற தனியார் வைத்தியசாலைகளில் எழுமாறான பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

மருந்துகளின் விலை, காலாவதித் திகதி, மயக்க மருந்துகளின் பாவனை, களஞ்சியப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன

இந்தப் பரிசோதனைச் செயற்றிட்டத்தில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் மெலிண்டன் கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், சுற்றுச்சூழல் மற்றும் தொழில்வாண்மை சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் ஆகியோரோடு உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் பிராந்திய மேற்பார்வை மருந்தாளர் திருமதி இந்திரகுமார் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



# நீர் தொடர்பான மைமல் பொழுது உரையாடல் யாழ் பல்கலையில்

வடமாகண நீர் உரையாடல் வட்டம், இளைய நீர்த்துறைமையாளர் வடக்கு வட்டம் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் இணைந்து நடாத்தும் மைமல் பொழுது உரையாடல் தொடரின் அமர்வு வரும் 24 ஆம் திகதி, வியாழக்கிழமை மாலை 4:30 தொடக்கம் 6 மணி வரை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

முனைவர் யோகேஷ் ஜடேஜா வளவாளராகக் கலந்து கொள்ளும் உரையாடல் தொடரில், இம்முறை அமர்வு, அளவிடல் கண்காணித்தல் மூலம் நிலத்தடி நீர் வளம் பேணலில் மக்கள் மைய நடவடிக்கைகள்: இந்திய அனுபவங்கள் எனும் தலைப்பில் இடம் பெறவுள்ளது.

வளவாளர் முனைவர் யோகேஷ் ஜடேஜா, மார்பி எனப்படும் நீர் தொடர்பான செயல் திட்டத்தின் ஊடாக இந்திய குஜராத் ராஜஸ்தான் மாநிலங்களில் ஐந்து ஆண்டுகளாக முன் நின்று வழிநடத்தி



மக்கள் ஈடுபாட்டினை வளர்த்தெடுத்த சாதனையாளர் ஆவார்.

நிகழ்வில் நிகழ்வில் கலந்து கொள்ள 07734 23 576 என்னும் தொலைபேசி இலக்கமூடாகத் தொடர்பு கொண்டு வரவினை உறுதிப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# பட்டிருப்பு வலய விளையாட்டு விழா



(வி.ரி. சகாதேவராஜா)

பட்டிருப்பு வலய விளையாட்டு விழா, வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் தலைமையில் செட்டிப்பாளையம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜி. திசாநாயக்கவும், சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா, திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார் மற்றும் கிழக்கு மாகாண உடற்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2023இல் வெளியிடப்பெற்றது.